# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

## Case No : STC.No.717/2022

**Prosecution witness : அ.சா.9** **Date : 27.06.2025.**

| Name : சுகுமார் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused Present)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் சி.பி.சி.ஐ.டி காவல் அலுவலகத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023ம் வருடம் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 07/02/2022–ம் தேதி காலை 6.30 மணிக்கு இவ்வழக்கில் காவல் உதவி ஆய்வாளர் மாதைய்யன் அவர்கள் நிலையப்பொறுப்பில் கந்தசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப கருமலைக்கூடல் காவல் நிலைய குற்றஎண்.37/2022 ச/பி 279, 304(ஏ) இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தார்.

2) பிறகு வழக்கு கோப்பை பெற்ற நான் கடந்த 07.02.2022ம் தேதியன்று காலை 07.15 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சாமிதுரை, சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர்தயார் செய்தார். வரைபடம் **அ.சா.ஆ.4** ஆகும்.

3) பிறகு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். நான் வழக்கு கோப்பை பெற்ற பின்னர் சாட்சிகள் தங்கராஜ், மருத்துவர் பிரசாத், மருத்துவர் சுகுமார், மருத்துவர் அகமத், முதல் நிலை காவலர் சேகர், உதவி ஆய்வாளர் மாதைய்யன், கந்தசாமி, சுதாகர், தங்கராஜ், சுவாமிதுரை, மகாராஜா, ஜெயசந்திரன்,

தங்கவேலு, வேல் , சங்கர், சாமிதுரை ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட பழனிசாமி என்பவர் முதலில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு பின்னர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். **இறப்பு உறுதி அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்.** பிறகு நான் பிரேதத்தின் மீது இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்யப்பட்டது. **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும்.** இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் மகேஷ்குமார் அவர்களிடம் முதல் நிலை காவலர் சேகர் என்பவர் மூலமாக பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு கடந்த 07.02.2022-ம் தேதி மதியம் 03.10 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிறகு நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது . சடலக்கூறாய்வு அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும்.

4) விபத்தில் ஈடுபட்ட TN 51 AC 9952 Tanker lorry வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திரு.தங்கராஜ் வசம் அனுப்பப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும். விபத்தில் ஈடுபட்ட TN 30 AL 0727 இரு சக்கர வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திரு.தங்கராஜ் வசம் அனுப்பப்பட்டது.மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும். கடந்த 07.02.2022ம் தேதி மாலை 4 மணிக்கு கருமலைக்கூடல் காவல் நிலையம் முன்பாக வைத்து நிலைய பிணையில் விடுவித்தேன்.

5) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 20.03.2022-ம் தேதி ச/பி 279, 304(A) இதச ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

6)பார்வை மகஜரில் கண்டுள்ள சாலை நான்கு சக்கர வாகனம் இரண்டும் தாராளமாக செல்லக்கூடிய பாதை என்றால் ஆமாம். நடுரோட்டில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். இரு சக்கர வாகனம் ரோட்டின் மேச்சேரியிலிருந்து மேட்டூர் வரும் போது தார் சாலையின் இடது புற ஓரமாக வருவது தான் போக்குவரத்து விதிகளுக்கு உட்பட்டு வாகனத்தை ஓட்டுவது என்றால் சரிதான்.

7) விபத்தில் இறந்தவர் ஓட்டிச் சென்ற வாகனம் போக்குவரத்து விதிகளுக்கு மாறாக ரோட்டின் வலது புறம் ஏறிச் சென்று தான் விபத்து ஏற்பட்டதாக சொல்வது சரியல்ல என்றால் மோதி நடுரோட்டில் இறந்திருப்பார். பார்வை மகஜரில் விபத்து நடந்த இடத்தை மட்டுமே குறிப்பிடுவோம் என்றால் ஆமாம். மேட்டூர் ஆர்.எஸ் பஸ் ஸ்டாப்பிற்கும் சம்பவயிடத்திற்கும் சுமார் 100 அடி தூரம் இருக்கும். ஆர்.எஸ் பஸ் ஸ்டாப்பிற்கு முன்பும், பஸ் ஸ்டாப்பை தாண்டியும் இரண்டு வேகத்தடை உள்ளது என்றால் ஆமாம்.

8) லாரி இரண்டு வேகத்தடையை தாண்டி தான் சம்பவயிடம் செல்ல வேண்டுமென்றால் ஆமாம். அவ்வாறு இருக்கையில் குறைவான வேகத்தில் தான் வாகனம் சென்றிருக்கும் என்றால் சரியல்ல. எதிரி ஓட்டுநர் உரிமம், வாகன காப்பீடு வைத்துள்ளார் என்றால் ஆமாம். அ.சா.1 நீதிமன்ற விசாரணையில் மது அருந்தி விட்டு சென்று என் மகன் விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) அ.சா.1 புகாரை காலை 9 மணிக்கு கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் ஆமாம்.அ.சா.1 புகார் கொடுக்கும் போது 10 பேர் வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். அ.சா.6 நீதிமன்ற விசாரணையில் சம்பவத்தை விபத்து நடந்து சிறிது நேரம் கழித்து தான் பார்த்தேன் என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10) அ.சா.6 நீதிமன்ற குறுக்கு விசாரணையில் விபத்தில் இறந்தவர் மது அருந்தியதால் அவர் தானாக விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்று

சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.6 விபத்தில் இறந்தவரை 10 ஆண்டுகளாக தெரியும் என்றும் அவர் அடிக்கடி மது அருந்திவிட்டு செல்வதால் இது போன்ற விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறந்தவர் மது அருந்தியுள்ளாரா என்ற விவரம் மருத்துவருக்கு தான் தெரியும் என்றால் ஆமாம்.

11) அ.சா.10 மருத்துவர் பிரசாத் நீதிமன்றத்தில் இறந்தவரின் மூச்சுகாற்றில் மதுவின் துர்நாற்றம் வீசியதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மது அருந்தியுள்ளதை சரியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்தவருக்கு ஆதரவாக இறந்தவர் மது அருந்தியுள்ள விவரத்தை மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

12) பார்வை மகஜர் சாட்சிகளை எங்கு விசாரித்தேன் என்றால் சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன். வாக்குமூலங்களை எந்த முறையில் பதிவு செய்தேன் என்றால் மடிக்கணினியில் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தை நிலையம் வந்து பிரதி எடுக்கப்பட்டது. காவல் நிலையம் வரவழைத்து கையொப்பம் பெற்றேனா என்றால் ஞாபகம் இல்லை.

13) மடிக்கணினியில் யார் பதிவு செய்தனர் என்றால் காவலர் பெயர் தற்போது நினைவில்லை. 161 வாக்குமூலங்களை எங்கு வைத்து பதிவு செய்தேன் என்றால் சம்பவயிடத்தில் பதிவு செய்தேன். வாக்குமூலங்களை எந்த முறையில் பதிவு செய்தேன் என்றால் மடிக்கணினியில் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தை நிலையம் வந்து பிரதி எடுக்கப்பட்டது.

14) பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள Amman and co electric கடை கோகுல் அழகு கடை, அருண் மொபைல் கடை குறிப்பிட்டுள்ள நிலையில் அவர்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சாட்சி சொல்ல அவர்கள் முன்வரவில்லை. பார்வை மகஜர், வரைபடத்திலே சம்பவம் ரோட்டின் நடுவே தான் நடந்ததாக குறிப்பிட்டுள்ளோம் என்றும் இந்த விபத்து முழுவதும் இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றவர் மது அருந்தி விட்டு வாகனத்தை இயக்க முடியாமல் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்று வலது புறமாக ஏறிச்

சென்று லாரி மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து இறந்தவரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.